www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com

A

# மூன்றாம் பருவத்தேர்வு – 2024

வகுப்பு : 6

# தொகுத்தறி மதிப்பீடு – தமிழ்

காலம் : 2 மணி மதிப்பெண்கள் : 60

## பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

1. "தேசம் உடுத்திய நூலாடை" என கவிஞர் குறிப்பிடும் நூல் ____________.
   அ. திருவாசகம் ஆ. திருக்குறள் இ. திரிகடுகம் ஈ. திருப்பாவை
2. 'சோம்பல்' என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ____________.
   அ. அழிவு ஆ. துன்பம் இ. சுறுசுறுப்பு ஈ. சோகம்
3. இவற்றுள் இடுகுறிப் பெயர் ____________.
   அ. பறவை ஆ. மண் இ. முக்காலி ஈ. மரங்கொத்தி
4. மலை + எலாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ. மலைஎலாம் ஆ. மலையெலாம் இ. மலையெல்லாம் ஈ. மலைஎல்லாம்
5. 'எளிதாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ. எளிது + தாகும் ஆ. எளி + தாகும்
   இ. எளிது + ஆகும் ஈ. எளிதா + கும்

**II. பொருத்துக.** 3 x 1 = 3

| | | |
|---|---|---|
| 6. தமிழ்நாட்டுக் கவிஞர் | – | ஜி.யு.போப் |
| 7. அறம் | – | பாரதியார் |
| 8. தமிழ்க் கையேடு | – | சினங்கொள்ளாமை |

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு வரிகளில் விடையளி.** 5 x 2 = 10

9. தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
10. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?
11. உலகம் முழுமையையும் எப்போது ஆள முடியும்?
12. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வை எழுதுக.
13. வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?
14. சொல் என்றால் என்ன?
15. உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் யாது?

**IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி.** 2 x 4 = 8

16. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?
17. எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழ, புத்தர்பிரான் கூறும் அறிவுரைகளுள் நான்கு எழுதுக.
18. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?
19. அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடையளி.** 1 x 5 = 5

20. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வை எழுதுக.
21. நூல்கள் அனுப்ப வேண்டி, பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக.

**VI. அடிபிறழாமல் எழுதுக.** 3 x 2 = 5

22. "புல்வெளி……… ……… கலைக்கூடம்" என்ற 'பாரதம் அன்றைய நாற்றங்கால்' பாடல்.
23. 'விடல்' என முடியும் திருக்குறள்.

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

**VII. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 6 x 2 = 12

24. அகர வரிசைப்படுத்துக.

ஒழுக்கம், உயிர், ஆடு, எளிமை, அன்பு, இரக்கம், ஓசை, ஐந்து, ஈதல், ஊக்கம், ஏற்றம், ஔவை.

25. இரு பொருள் தருக.

அ. திங்கள் ஆ. ஆறு

26. கலைச்சொல் எழுதுக.

அ. Humanity ஆ. Scouts & Guides

27. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ. ஆடம்பரம் ஆ. உரிமை

28. தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

அ. அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தன.

ஆ. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்.

29. சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| மாணவன்<br>மாணவர்கள் | பள்ளிக்கு | வந்தார்கள்<br>வந்தான் |

30. குறட்பாவில் உள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதி உரிய எழுத்தை அடிக்கோடிடுக.

பிறர்க்குஇன்னா முற்பகல் செயின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

## பகுதி – ஆ

31. **கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.** 3 x 1 = 3

உ.வே.சாமிநாதர் 1855 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 அன்று தஞ்சை மாவட்டம் உத்தமதானபுரத்தில் பிறந்தார். தமது 17 ஆவது வயதில் 'மகாவித்வான்' என்றழைக்கப்பட்ட திருச்சி மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் 5 ஆண்டுக் காலம் பயின்று தமிழறிஞர் ஆனார். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, புறநானூறு போன்ற 90 க்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்துள்ளார். 3000 க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் சேகரித்துள்ளார். இவரின் 'என் சரிதம்' என்னும் வாழ்க்கை வரலாற்று நூல் குறிப்பிடத்தக்கது.

1. உ. வே. சா. பதிப்பித்த காப்பிய நூல்களுள் ஒன்றை எழுதுக.
2. உ.வே.சா. சேகரித்த ஓலைச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கையை எழுதுக.
3. 'என் சரிதம்' என்னும் நூல் யாருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது?

32. **ஏதேனும் ஒரு தலைப்பில் கவிதை எழுதுக.** 1 x 3 = 3

"கல்வி" அல்லது "அன்பு"

33. **'வீட்டில் உங்கள் பொறுப்புகள்' என்பது பற்றி, இரண்டு தொடர்கள் எழுதுக.** 2 x 1 = 2

34. **விடைக்கேற்ற வினா அமைக்க.** 2 x 1 = 2

அ. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.

ஆ. இடுகுறிப்பெயர் இரண்டு வகைப்படும்.

35. **சரியான இடத்தில் பொருத்தமான நிறுத்தக் குறியிட்டு எழுதுக.** 4 x 1/2 = 2

பெண்ணே நீ யார் உணவு அள்ள அள்ளக் குறையாத இப்பாத்திரத்தின் பெயர் என்ன இஃது உனக்கு எப்படிக் கிடைத்தது

www.Padasalai.Net